www.pustaka.co.in

# மந்திர வாசல்



இந்திரா சௌந்தர்ராஜன்

http://www.pustaka.co.in

# மந்திர வாசல்

# Mandhira Vaasal

## Author:


## இந்திரா சௌந்தர்ராஜன்

## Indira Soundarrajan


For more books

http://www.pustaka.co.in/home/author/indira-soundarajan

Digital/Electronic Copyright © by Pustaka Digital Media Pvt. Ltd.

All other copyright © by Author.

All rights reserved. This book or any portion thereof may not be reproduced or used in any manner whatsoever without the express written permission of the publisher except for the use of brief quotations in a book review.

பொருளடக்கம்

அத்தியாயம் 1

அத்தியாயம் 2

அத்தியாயம் 3

அத்தியாயம் 4

அத்தியாயம் 5

அத்தியாயம் 6

அத்தியாயம் 7

அத்தியாயம் 8

அத்தியாயம் 9

# 1

மார்கழி மாதம்!

எலும்பைக் குடைந்து நரம்பைத் திருகும் குளிரை துளிகூட பொருட்படுத்தாமல் பச்சைத் தண்ணிரில் குளித்துக் கொண்டிருந்தார் பத்மநாப சர்மா.

வீட்டுப் புழக்கடையில் விசாலமான சதுரத்திட்டுக் கிணறு. கிணற்றைச் சுற்றி இடுப்புயர துணி துவைக்கும் கல். கல்லின் மேல் அவர் மடியாய் உடுத்திக் கொள்ளத் தோதாக புதிய வஸ்திரங்கள். அவரது மனைவி பாக்யம் இவருக்கும் முன்பாகவே குளித்து முடித்து ஈரம் சோட்டும் தலையுடன் சர்மாவுக்காக இவ்வளவு ஏற்பாட்டையும் கடந்த இருபது வருஷங்களாகவே செய்து வருகிறாள். இன்றும் கூட.

மிகவும் சாஸ்திரபூர்வமான மனிதர் சர்மா.

அதிகாலையில் குளியல். அதன் பிறகு தியானம், சூரியன் பரிதி வட்டம் காட்டத் தொடங்கும் சமயமாகப் பார்த்து சந்தியா வந்தனம். பின்னர் சகஸ்ரநாம பாராயணம். பின்னர் பிரார்த்தனை.

அவருக்காக நெற்றியில் கிறு பூசி பளிச்சென்ற தோற்றத்தோடு ரிக்ஷாக்காரன் துரைசாமி சர்மாவை எதிர் கொள்ளத் தயாராக இருப்பான்.

"நமஸ்காரம் சாமி..." என்று ஸ்பஷ்டமாக கும்பிட்டு நிற்கும் துரைசாமி, சர்மாவுக்காக மட்டுமே ரிக்ஷா ஒட்டுபவன். அதை தன் பாக்கியமாக நினைப்பவன்.

இன்றும் அப்படியே சர்மா தன் தினப்படி கடமைகளை முடித்து விட்டு

ஆஞ்சனேயர் கோவிலுக்கு கிளம்ப ஆயத்தமாகி விட்டார்

அவர் எதிரே புன்னகை முகத்தோடு நெற்றியில் நீரோடு தென்பட்டான் அவரது ஒரே பிள்ளை கலாதரன். அப்பாவுக்கு பிள்ளை தப்பாமல் அந்த பாலமுருகனைப் போலவே காட்சி அளித்தான். "அப்பா..."

"என்னப்பா?"

"இன்னிக்கு சந்தியா வந்தனத்தின் போது ஆயிரத்தெட்டு காயத்ரி ஜெபிச்சேன்பா…"

"சந்தோஷம் கவசம் சொன்னியா? "

"சொல்லப் போறேன்பா. சௌந்தர்ய லஹரியும் சொல்லணும்..."

"அதெல்லாம் அப்புறம். வயசுக்கு தகுந்த புனஸ்காரம் போதும்பா!"

"அப்படின்னா குமரகுருபரர் மட்டும் சுயமா பிள்ளைத் தமிழே பாடி, சிறுவயசுலேயே மீனாட்சி தரிசனம் பண்ணினாரே, அது தேவலையோ?"

சர்மா கலாதரனின் அந்த கேள்வி முன் மடங்கித்தான் போனார். மகனை வாஞ்சையாக பார்க்கிறார்.

பஞ்சமி திதியில் நல்ல வெள்ளிக்கிழமையின் உதய வேளையில் அந்த சூரியன் போலவே ஜனித்த பிள்ளை. பரணி நட்சத்திரத்தின் முதல் பாதத்தில் தரணி ஆளப் பிறந்தவன்.

அவன் பிறந்த மறுநிமிடமே காஞ்சி மடத்தில் இருந்து பெரியவர். அனுக்ரஹித்து தந்த பிரசாதமும் வந்து சேர்ந்திருந்த அந்த நிகழ்ச்சியில் அவர் மனதும் புகுந்து திரும்புகிறது. நெகிழ்கிறது. கூடவே துளி கவலையின் திவலை.

இந்தப் பிள்ளை கலைகளுக்கெல்லாம் தலைவனா விளங்கப் போறான். ஆகையால் கலாதரன்னு பேர் வையுங்கோ. எதையும் ஒரு தடவை சொன்னா போதும், கப்புன்னு பிடிச்சிக்கற கற்பூர சக்தி இவன் கிட்ட இருக்கு.

ஆனா, இவனோட பதிமூணாவது வயசுல ஒரு பெரிய கண்டம் இருக்கு. அதை இவன் கடந்தாகணும். நடந்துட்டா. இவன் இந்த சமூக சொத்து இல்லேன்னா இந்த சமூகம் இவனோட சொத்தாயிடும்."

கவலைக்கு காரணமாக இவன் ஜாதகம் கணித்து ஒரு பெரியவர் சொன்னதும் காதில் ஒலிக்கிறது. அவர் சொன்ன பதிமூன்று வயதுதான் இப்பொழுது நடந்து கொண்டிருக்கிறது. எந்த கண்டம் எப்படி வரும் என்று தெரியவில்லையே...??

சர்மா கேள்வியோடு கோவிலுக்கு கிளம்புகிறார்.

அந்த ஜோசியர் ஒண்ணும் தேங்காய் மூடி ஜோசியர் இல்லை. ஜோதிட சாஸ்திரத்தை விஞ்ஞான பூர்வமாக அலசி பேசுபவர். சொன்னது சொன்னபடி நடந்திருக்கிறது. நடக்கவும் போகிறதோ?

# 2

அயர்ந்து தூங்கிக் கொண்டிருத்தார் கருணாகரன். விரல் கொள்ளாத வைர மோதிரம். கழுத்தில் புலிநகச் செயின். பட்டையான பெல்டினாலே இடுப்பைச் சுற்றி கட்டப்பட்டிருக்கும் பிரீமியர் மில் வேட்டி.

பார்க்கவே பணக்கார தோரணையை பளிச்சென்று. காட்டும் மனிதரின் மூச்சுக்காற்றிலும் அவ்வப்போது உதடு பிளந்துவிடும் குறட்டைச் சப்தத்திலும் பிராந்தியின் தூக்கலான வாடை

அவரது தலைமாட்டில் டெலிபோன்.

அது அர்த்த ராத்திரி என்றும் பார்க்காமல் அலறத் தொடங்குகிறது. போதை உறக்கத்தையும் மீறி கருணாகரன் காதைக் குடைகிறது. ஒரு வழியாக தூக்கத்தை கலைத்துக் கொண்டு டெலிபோனை எடுத்து கருணாகரன் காதில் சற்று முரட்டுத்தனமான ஒரு குரல்.

"என்ன கருணா? நல்ல தூங்கிகிட்டிருக்கியா? "

அந்த கேள்வியின் தொனிப்பிலேயே அது யார் என்பது கருணாகரனுக்கு புரிந்து விட்டது. கோபாலன் நம்பூதிரி.

"வணக்கம் சாமி, நீங்களா...நீங்க எப்படி டெலிபோன்ல அதுவும் என்கூட?"

"ஏன் பேசக் கூடாதா?"

"ஐய்யய்யோ நான் அப்படி சொல்வேன. உங்க,ளாலதானே சாமி நான்

இன்னிக்கு வசதியா வாளிப்பா இருக்கேன்."

"அந்த நினைப்பு உனக்கு இருந்தா சரி..."

"இந்த மாதிரி கேள்வியை சாமி ஏன் இப்படி அர்த்த ராத்திரியில கேக்கறிங்கன்னு தெரிஞ்சுக்கலாமா?"

"காரணம் இருக்கு...நீ அதிகாலை நாலு மணிக்குள்ள என்னை வந்து பாக்கணும்."

"என்ன விஷயம் சாமி?"

"எல்லாத்தையும் நேர்ல சொல்றேன்."

"சாமி நான் எங்க வரணும்?"

"மணல்மேடு காவேரி ஆத்தங்கரைக்கு வா. நான் தியானத்துல இருப்பேன்."

"நல்லது சாமி... "

போனை முடக்கிய கருணாகரன் முகத்தில் முத்து முத்தாக வியர்வை. போதையும், தூக்கமும் துப்புரவாக விலகி விட்டிருந்தது.

மனதில் குரூரமான கோபாலன் நம்பூதிரி முகத்தின் ரூபம் தோன்றித் தோன்றி மறைந்தது.

கெடிகாரத்தில் பன்னிரெண்டு மணிக்கான சப்தம்.

இரவின் நிசப்தத்தில் அந்த சப்தம் அவரை அளவுக்கு அதிகமாகவே மிரட்டியது. பக்கத்து கண்ணாடி ஜாடி தண்ணிரை குடித்துப் பார்த்தார். வாக் மேனை எடுத்து காதில் வைத்துக் கொண்டு மனதை ஒரு முகப்படுத்தப் பார்த்தார்.

காதுக்குள் தளபதிக்காக ராக்கம்மா கையைத் தட்டினாலும் மனதுக்குள் அந்த முரட்டு முகத்தின் தோன்றுதல் நிற்கவேயில்லை.

இப்போது கதவருகே யாரோ வந்து நிற்பது போல் ஒரு பிரமை அவருக்குள்

நிஜமாலுமே யாரோ தான்.

"யாரது?" அழைத்துப் பார்த்தார். பதிலில்லை. திடும்மென்று தாழம்பூவின் வாசம் நாசியை நிரடியது. கருணாகரன் அடிவயிற்றில் பயப் பூச்சி அநியாயத்திற்கு நெளிய ஆரம்பித்தது.

கதவுக்கு அப்பால் நிழல் ஒன்று நீண்டு விலகுவது போல் தோன்றியது.

`திரும்பவும் அபிராமியின் சேட்டையா இது?` மனதுக்குள் முட்டிக் கிழித்தது பயங்கலந்த கேள்வி ஒன்று. தோட்டத்து பக்கத்தில் இருந்து இப்போது நாயின் குரைப்புச் சத்தம் தீர்க்கமாகவே கேட்க ஆரம்பித்தது.

தாழம்பூ வாசம் தேய்ந்து இப்போது ஒருவிதமான துர்வாடை....

கருணாகரன் விழிகள் வெளித்தள்ளத் தொடங்கின. தைரியத்தை வரவழைத்துக் கொண்டு எழுந்து கொண்டவர். மெல்ல ஜன்னலை விலக்கி திரைச் சிலையை நகர்த்தி தோட்டத்தை ஊடுருவ தோட்டத் மகிழ மரத்தின் கிளை ஒன்று மட்டும் இடவலமாக யாரோ அமர்ந்திருக்கும் விதத்தில் ஆடிக்கொண்டிருந்தது. அருகாமைச் செடிகள் எல்லாம் காற்று வீச்சு இல்லாமல் சிலைபோல் இருக்க அந்த மரக்கிளை மட்டும் ஆடிக் கொண்டிருந்தது.

"அபிராமி... அபிராமி..." கருணாகரனின் உதட்டில் தீனமான முனகல். "உன்னால்தான் நான் நம்பூதிரியை சந்தித்தேன். இப்பவும் எதுக்காக இல்லாவிட்டாலும் உன் உபத்ரவத்துக்காகவாவது நான் நம்பூதிரி சாமியை சந்திச்சே தீரணும்." உதடுவிட்டு முனங்கிய கருணாகரன் மெல்ல படுக்கையின்மேல் வந்து விழுந்தார். மணி மூன்று ஆகும்வரை உடம்பின் நரம்புகளில் ஒரு அசாத்ய பயம் அவரை இறுக்கிக் கட்டியிருந்தது.

மூன்றுக்கெல்லாம் படுக்கையை விட்டு எழுந்து கொண்டவர் திரும்ப ஜன்னலோரமாக சென்று தோட்டத்தை நோட்டமிடவும், அங்கே மரக்கிளை ஆட்டம் இன்றி இயல்பாக அவர் பார்வையில் பட்டது.

அப்பாடா...!

# 3

போர்டிகோவை விட்டு ஒரு புயலைப்போல சீறியது கார். தோட்டத்தில் கட்டிப் போடப்பட்டிருந்த நாய் அதிசயமாக தனது எஜமானனின் அந்த வேகத்தைப் பார்த்தது. பங்களா

காம்பவுண்டை தாண்டும் இடத்தில் தலையில் மஃப்ளர் கட்டோடு வாட்ச்மேன் தெரிந்தான். முகத்தில் பிரேதக்களை!

"எஜமான். இன்னிக்கு என்னால இங்கே உக்காரவே முடியலை. ஒரே அழுகை சப்தம். இங்க இனி என்னால வேலை பார்க்க முடியாதுங்க... "

கம்மிய குரலில் பேசியவனை கருணாகரன் வெறித்தார். "எல்லாம் சரியாயிடும்... " என்றபடி கியரை மாற்றி ஆக்சிலேட்டரை மிதித்தார்.

அகண்ட காவிரி ஆற்றோரம்.

தொட்டியம் கடந்த மணல் மேட்டுச்சாலை, காரை ஓரிடத்தில் நிறுத்திவிட்டு இறங்கி நடக்க ஆரம்பித்தார்.

மெல்லிய சந்திர ஒளி, கோரைப்புதரை வளைத்துக் கொண்டு ஓடும் ஆற்று நீரின் சுழற்சியில் மார்பளவு ஆத்தில் நம்பூதிரி நின்று கொண்டு ஏதோ முணுமுணுப்பது கரையோரமாக நடந்துவரும் கருணாகரனின் காதில் மெல்ல விழத்தொடங்கியது.

பலமான குளிர்காற்று... உடம்பை பிராண்டும் குளிரில் கருணாகரன் லேசாக நடுங்க 'வா கருணாகரா...' என்கிற நடுக்கமில்லாத அழைப்பு கோபாலன் நம்பூதிரியிடம்.

"சாமி சொன்ன மாதிரி வந்துட்டேன்."

"நல்லது…"

"எதுக்கு வரச் சொன்னிங்க. இங்க என்ன பண்றீங்க?"

"ஜல ப்ரீதி! இதுக்காகவே வயநாட்டுல இருந்து வந்தேன். "

"அப்படின்னா..? "

"என் ஜனன ஜாதகப்படி பஞ்ச பூதங்களாலதான் எனக்கு மரணம் வர முடியும். அதுல ஒண்ணு ஜலம். அந்த ஜலத்தால எனக்கு மரணம் நேரக்கூடாதுன்னு மாந்திரீக ப்ரீதி பண்றேன்..."

"உங்களுக்குள்ளயும் மரண பயமா?"

"மரணபயம் இல்லாத மனுஷனை நீ பாக்கவே முடியாது கருணாகரா... "

"சரி சாமி எதுக்கு வரச்சொன்னிங்க?"

"என்னோட வாரிசை உனக்கு தெரியும்தானே?"

"யாரு விஷ்ணுபதியை சொல்றீங்களா? "

"ஆமா அவனேதான். என் மாந்திரீக உலகத்தோட ஒரே வாரிசா அவனை நெனைச்சிருந்தேன். விபரீதமா பயிற்சி எடுத்த அவன் இப்போ குணசீலம் கோயில் னபத்தியங்கள்ல ஒருத்தனா ஆயிட்டான்!"

"என்ன விஷ்ணுபதிக்கு பைத்தியமா?"

"ஆமா...மந்திர தந்திரங்களை சரியா கையாளத் தெரியாததுனால இந்தக் குழப்பம் ஏற்பட்டு போச்சு. இனி அவன் காலம் பூராவும் பிராந்தன்தான்..."

"அவனை தெளிவிக்க முடியாதா? "

"முடியாது. அந்த சன்னதிக்குள்ள நுழைஞ்சு விஷ்ணு பதியை மீட்டு வந்து தெளியவைச்சு திருப்பவும் அவனை தயார் படுத்தறதை விடவும் வேற ஒரு வழி எனக்கு இருக்கு... "

"என்ன அது?"

"ஆமா யார் அது பத்மநாப சர்மா...? "

"நீங்க எந்த சர்மாவை சொல்றீங்க...? "

"உன் ஊர்லையே அருள் வாக்கு சர்மான்னா அது ஒருத்தர் தானே?"

"ஓ அருள் வாக்கு சர்மாவா? "

"ஆமா... அவருக்கு ஒரே ஒரு மகனாமே? "

"ஆமாம். பார்க்க படுலட்சணமா இருப்பான். "

"அவன் எனக்கு வேணும் கருணாகரா! "

அவனா? உங்களுக்கா? "

"ஆமாம். இனி என் வாரிசு அவன்தான். "

"சாமி அந்த புள்ளை இந்த மாதிரி விஷயத்துக்கு ஒத்துவருமா?’’

"அபூர்வ பிறவிப்பா அவன். என்னோட பிரஷ்னத்துல அவன் ஜாதகம்தான் கண் முன்ன தெரியுது. வாரிசை காட்டு மோகினின்னு நான் எத்தனை தடவை கேட்டாலும் அத்தனை தடவையும் அவள் காட்டற ஜாதகம் அவன் ஜாதகம்தான்...? "

கருணாகரனிடம் அசாத்ய மவுனம். ஆற்றங்கரை காற்றோ விசிலடிக்காத குறையாக வீசிக்கொண்டிருந்தது.

கோரைப் புதர்களில் அதன் தழுவலில் ஒரு தினுசான நாட்டியம்.

"என்ன கருணாகரா பதிலைக் காணோம்."

"என்னை மன்னிச்சுடுங்க சாமி. சர்மா தங்கமான மனுஷர். அவரோட ஒரே வாரிசு அந்த பிள்ளை. அது நல்ல விதமா எதிர்காலத்துல வரணும்னு நான் நினைக்கிறேன்."

"அப்படின்னா மாந்திரீக உலகம் மோசம்னு சொல்லாம சொல்றியா?"

"நான் அப்படிச் சொல்லலை சாமி... இதைவிட அந்த ஆன்மீக உலகம் ஒசந்ததுன்னு சொல்றேன்.

"முட்டாள். மாந்திரீகம்தான் இந்த உலகத்தோட பெரிய வித்தை. நெருப்பை விழுங்கலாம். இரும்பைக் கரைக்கலாம். மனிதர்களோட மனோசக்தியை ஒருமுகமும் படுத்தலாம். சிதறவும் அடிக்கலாம். இவ்வளவையும் மாந்திரீகத்தால் மட்டும்தான் செய்யமுடியும். ஏன் நீயே இதனால அடைஞ்சுருக்கற பலன்களை நினைச்சுப் பாரு அப்பத் தெரியும் உனக்கு... "

கருணாகரனிடம் அதைக் கேட்டு அசாத்யமான மவுனம் தொடர்ந்தது.

"எனக்கு சர்மாவோட மகன் வேணும். அதுவும் விடியறதுக்குள்ள வேணும். ஜலப்ரீதியை நான் முடிச்சு சூரியன் உதிக்கறதுக்கு முன்னே அவனை நீ இங்க கொண்டு வரணும். பிறகு உன் கார்லையே எங்க இரண்டு பேரையும் நீ திருச்சி ஜங்ஷன்ல ரெயிலேற்றி விடணும்... "

"எனக்கு பயமா இருக்கு சாமி. ஒரு பிள்ளையை சமூகத்துல கவுரவமான நானே கடத்தறது நல்லதுக்கா. மாட்டிகிட்டா என்ன ஆகறது?"

"பயப்படாதே… உன் கூட யட்சி வருவா. நான் ஒரு பொடியைத் தரேன். அதை அந்த பையன் மேல தூவு மயக்கமாயிடுவான். தூக்கிகிட்டு வந்திரு."

"என்ன சாமி இது... சர்வ சாதாரணமா சொல்றீங்க."

"ஆமா சாதாரணம்தான். என் மாந்திரீக சக்திக்கு இதெல்லாம் சாதாரணம்தான்."

"சரி சாமி உங்க விருப்பப்படியே செய்யறேன். ஒரு முக்கிய விஷயம் சாமி."

"என்ன?"

"அந்த அபிராமியோட ஆவி என்னை விட மாட்டேங்குது... சுத்தி சுத்தி வருது. இப்ப கூட ராத்திரி அதோட உபத்ரவம்தான்."

"கவலைப்படாதே... நான் நாலு தகடு தரேன். உன் வீடு தோட்டத்துல நாலு திசையிலையும் அதை புதைச்சு வை. அப்புறம் ஒரு பிரச்சினையும் இருக்காது..."

"இதுக்கு முந்தியும் அப்படித்தான் சொன்னீங்க. செய்தேன். ஆனா திரும்ப உபத்ரவமா இருக்கே?"

"இந்த முறை இருக்காது. பேச நேரமில்லை. தைரியமா போய் நான் சொன்னபடி செய்துட்டு வா...'

கருணாகரன் அரைமனதாக கிளம்பினார்.

ஊரில் பெரிய பணக்காரராய், தொழிலதிபராய் இருந்தும் இப்படி நம்பூதிரிக்கு குற்றேவல் செய்ய வேண்டிய அந்த நிர்ப்பந்தத்தை நினைத்தபோது அவர் மனதில் சரியான பாசிக் கூச்சம். தனது பலவீனத்தை நம்பூதிரி மிகச் சரியாக பயன்படுத்திக் கொள்ளும் அந்த சாமர்த்தியத்தை நினைத்தாலோ, இயலாமை கலந்த எரிச்சல்.

"கருணாகரன் ஒரு அப்சர கன்னி… ஆலிங்கனம் செய்ய வரணும்…' நம்பூதிரியிடம் இருந்து இப்படித்தான் அழைப்பு வரும்

போனால் நிஜமாலுமே அப்சரஸ் போல பதினெட்டு இருபது வயதில் பெண்ணைக் காட்டுவான்.

"இவளைக் கொண்டு ஞான் கன்னி பூஜை செய்தேன். இனி நீ காம பூஜை செய்" என்று கருணாகரனை நோக்கித் தள்ளி விடுவான்.

முழு நிர்வாணத்தில் பிரமை பிடித்த மாதிரி நிற்கும் அந்தப் பெண் சொன்னதற்கெல்லாம் கட்டுப்படுவாள்.

"எப்படி சாமி இப்படி வசியப்படுத்தறிங்க?"

"எல்லாம் மனோ வலிமைதான் இந்த குட்டியை இவள் வீட்டிலிருந்து தானாகவே இங்க வரவழைச்சேன். இப்ப நடக்கற எதுவும் இவளுக்குத் தெரியாது. நீ அனுபவிச்சு முடிச்ச பிறகு வசியத்தை எடுத்து திருப்பி அனுப்பிடுவேன்."

நம்பூதிரி இப்படி சொல்லி, தனது ஆசைக்கு இணங்க வைத்த அறியாப் பெண்கள் தான் எத்தனை பேர்!

சமயங்களில் தன்னிடம் வேலை கேட்டு வரும் இளம் பெண்களைக் கூட நம்பூதிரியின் உதவியோடு வசியப் படுத்தி, அவர்களை நாசமாக்கி... நினைக்கும் போதே. வாலிபத் திமிரில் தான் செய்யக்கூடாததை எல்லாம் செய்து விட்டது போன்ற ஒரு வருத்தத்தில் கருணாகரன் முகத்தில் தன் மேலேயே கழிவிரக்கம்.

இப்பொழுது நினைத்தாலும் அப்படி ஆட முடியாத எல்லைக்கு உடம்பு போய் விட்டது. ரத்தத்தில் வண்டி வண்டியாய் சர்க்கரை, தினப்படி உணவே கோதுமை சக்கைதான்!

ஆசை ஆசையாய் கைபிடித்த அபிராமி கூட காலமாகி, ஆன்மசாந்தி அடையாமல் ஆவியாக வந்து உபத்ரவம் செய்து கொண்டிருக்கிறாள். வாழ்வில் எல்லாம் நம் வசம்தாம் என்று நினைத்து செயல்பட்டதுதான் எத்தனை ஆங்காரக் கொடுமை!

அந்த பாவத்துக்குதான் இப்படி கலாதரனை எல்லாம் கடத்திச் செல்ல வேண்டிய அபாயப் பொறுப்போ? கருணாகரனுக்கு எண்ணங்களின் அலை பாய்ச்சல்.

## 4

னி கொட்டும் வீட்டுத் தோட்டம், பத்மநாப சர்மா குளித்து முடித்த ஈரத்தோடு கூடிய கிணற்றடி பூஜை அறையில் சர்மாவின் ஸ்லோக

ப பாராயணம். தோட்டத்து மரத்தில் காக்கை ஒன்று சிறகு படபடத்து கொட்டாவி விட்டு கிழக்கை பார்த்தது. கறுத்த அந்த பரப்பில் மிக மெல்லிய மஞ்சள் வெளிச்சம் வீட்டைச் சுற்றி இடிந்த சிதிலமான காம்பவுண்ட் சுவர். சுவற்றின் ஓரமாக கருணாகரன்!

மனதில் செய்யக் கூடாததை செய்யப்போகும் படபடப்பு.

"சை... இந்த மாதிரி செயல்களில் ஒரு பெரிய மனிதன் ஈடுபடலாமா? மனதில் பிராண்டலான கேள்வி.

'பேய்க்கு வாழ்க்கைப்பட்டால் புளியமரம் ஏறித்தானே தீரவேண்டும்?'- அதே மனதில் பதில்.

பார்வையோ தோட்டத்து பக்கமாக கலாதரன் வர மாட்டானா என்று எதிர்பார்த்துக் கொண்டே இருந்தது.

வருவான்…

கட்டாயம் வருவான்…

வந்தால் அவனை உற்றுப் பார்...

உன்னை நோக்கி வருவான்.

சுவர் எட்டிக் குதிக்கச் சொல்…

எட்டிக் குதிப்பான். காரில் ஏற்றிக்கொள்...

நீ சொல்வதற்கெல்லாம் கட்டுப்பட்டு நடப்பான்.

"ஒருக்கால் நடக்கத் தவறினால் பொடியைத்தூவி..." காதோரமாக யாரோ திரும்பத் திரும்பச் சொல்வது போல்பட்டது. நம்பூதிரியின் யட்சியின் வேலையோ!

கருணாகரன் மனதில் யட்சி குறித்த நினைப்பு அந்த நினைப்பின் ஊடே அடிக்கொருதரம் சுற்றிச் சுற்றி பார்த்துக் கொள்கிறார்.

அந்த இருட்டில் யாரையும் காணோம்.

தொலைவில் எங்கோ இருந்து வரும் பால்காரனின் சைக்கிள் மணி ஓசை.

அது மணி ஓசையா... இல்லை பயத்தின் ஒசையா?

கருணாகரன் விதிர்த்த சமயம் தோட்டத்து கிணற்றடியில் கலாதரன் தென்பட்டான்

இடுப்பில் குற்றாலத் துண்டு. முகத்தில் தூக்க கலக்கம். பல் துலக்க ஆயத்தமாகி இருந்தான்.

தோட்டத்து மின்சார பல்பின் மட்டமான மஞ்சள் வெளிச்சத்தில் மார்பில் பூணூலுடன் கலாதரன் கிணற்றடியில் பல் துலக்கியபடி நிற்பது கருணாகரனின் பார்வையில் படுகிறது.

"கலாதரா... கலாதரா…" மெலிய பேர் சொல்லி அழைக்கிறார். அவன் திரும்பிப் பார்க்கிறான். "யாரது இந்த அதிகாலையில் தோட்டத்து சுவர் அருகிலிருந்து" பார்வையில் துழாவியவன் கிணற்று திட்டை விட்டு இறங்கியபோது, காலில் துளசி செடி வைத்த மண் சட்டி தடுக்கியது.

"கலா... போகாதே! போகாதே!!"

ஊஹூம்… மனது கேளாமல் சுவற்றை நெருங்கியவன் கருணாகரன் முகத்தை இருளில் ஊன்றிப் பார்க்க முயல, "வா கலாதரா வா..." அவர் அழைக்கிறார். அவன் எதுவும் பேசாமல் சுவர் ஏறிக் குதிக்க முயல அந்த குற்றாலத் துண்டு இடுப்பில் இருந்து நழுவி கீழே சுவர் ஒரமாக விழுகிறது.

"இதற்கு பேர்தான் ஸ்தூல வசியம்..."

காதோரம் யட்சியின் குசுகுசுப்பு..இந்த குசுகுசுப்பு நிஜமா? இல்லை பிரமையா?

ஓடிப்போய் கார் கதவை திறக்கிறார் கருணாகரன்' 12 வயது கலாதரன் நிர்வாணமாய் அதில் ஏறுகிறான். கருணாகரன் மனதை ஏதோ ஒன்று நிரடுகிறது திரும்பித் திரும்பி பார்த்தபடி காரை ஸ்டார்ட் செய்கிறார்.

வெளிச்சம் வீதியில் பாய, கார் சீற… தொட்டியத்தை ஒட்டிய காவிரிக் கரையோர தார்ச் சாலையில் அவரது கார் பயணிக்கிறது

பின் சீட்டில் அசையாத பிம்பமாய் கலாதரன். "கலாதரா... கலாதரா..." அழைத்துப் பார்க்கிறார். ஊஹூம் அவனிடம் பதில் இல்லை.

'ஹூம் என்னவெல்லாமோ நடக்கிறது. நீ இனி எங்கே போகப் போகிறாயோ? என்ன ஆகப் போகிறாயோ?' அவர் மனதில் படபடப்பு.

"இவன்தான் இனி மாந்திரீக உலகின் மகா மைந்தன். யட்சி, குளறி, காத்தான், சாத்தான், பைசாசம், மோகினி ராகிணி, ரவுத்ரினி, சண்டி, சாகாசி, பைரவி, பராந்தகி" என்கிற எங்கள் இனத்துக்கு எல்லாம் இவன் குரு. ஏவல், தூவல். எந்திர தந்திரம் எல்லாம் இவன் சொல்லுக்கடிமை ஆகும்.

சனியின் புதல்வன் மாந்தியின் அம்சம் இவன். அந்த மாந்தியிடம் இருந்து வந்ததுதான் மாந்திரீகம்.

இனி வரும் நாற்பது வருஷங்கள் இவன் மாந்திரீக மகா கலையின் மகராஜன்'

காதோரம் யட்சி சொல்கிறது. கருணாகரனுக்குள் மனது நடுங்குகிறது.

தான் இப்படி சகஜ வாழ்வை விட்டு நம்பூதிரி வசம் வந்து மாட்டிக் கொண்டு இப்படி கடத்தல் எல்லாம் செய்ய வேண்டியதை எண்ணி அது குலைந்து போகிறது.

அபிராமி

கருணாகரனின் ஆசை மனைவி.

அபூர்வ பிறவி, இரண்டு கைகளிலும் அவளுக்கு ஆறு விரல்கள். மொத்தம் பன்னிரெண்டு விரல்கள்.

பன்னிரெண்டு முருகாம்சம் அல்லவா?

அந்த பன்னிரெண்டு விரல்களால் பன்னிரெண்டு வெள்ளைத் தாமரையை மாலையாக தொடுத்து. தட்சிணாமூர்த்திக்கு போட்டால் நினைத்தது நடக்கும் என்று யாரோ சொல்ல அபிராமியும் அப்படிச் செய்ய பக்கத்தில் உள்ள திருநீர் மலைக்கு போனாள். அடி வாரத்தில் காரை நிறுத்திவிட்டு படி ஏறி பூக்கூடையுடன் அவள் நடப்பதை மேலே இருந்து கீழே இறங்கும் ஒரு மாந்திரீகன் பார்த்து விட்டான். அவளை விட அவளது பன்னிரெண்டு விரல் அவனை வெகுவாக இழுத்தது.

பன்னிரெண்டு விரலால் கோலமிட்டு அதன் மேல் சக்கரம் ஸ்தாபித்து சில பூஜை செய்தால் விசேஷ சக்திகள் கிடைக்கும் என்று அவன் உள்

மனதில் தோன்ற அவளை அப்படியே வசியம் செய்து இழுத்துக் கொண்டு போய் விட்டான்.

கருணாகரன் போலீஸ், பத்திரிகை என்று ஒரு வாரம் அலைந்தும், விளம்பரம் செய்து தேடியும் அபிராமியை கண்டு பிடிக்க முடியவில்லை.

அப்பொழுதுதான் வியாபார ரீதியாக மிக பரிச்சயமான நண்பர் ஒருவர் மூலம் நம்பூதிரியைப் பற்றிய தகவல் அவருக்கு கிட்டியது.

"போய் பாருங்க...... நம்பூதிரி பெரிய ஆளு. மை போட்டு பார்த்து எங்க இருந்தாலும் கண்டுபிடிச்சு கொடுத்துடுவார். மகாசக்தி வாய்ந்த மாந்திரீகர் அவர்."

அதேபோல் கருணாகரனும் நம்பூதிரியை போய்ப் பார்த்தார். நம்பூதிரியும் அபிராமி இருக்கும் இடத்தை எப்படியோ கண்டுபிடித்து அந்த மாந்திரீகனிடம் இருந்து மீட்டும் கொடுத்து விட்டார்.

இப்படித்தான் கருணாகரனுக்கு நம்பூதிரியிடம் பரிச்சயம் ஆரம்பமானது. பிறகு வியாபாரத்தில் லாபம் பெருகவும், எதிரிகளை வீழ்த்தவும் வரிசையாக நம்பூதிரி உதவி செய்து கருணாகரனை தன் வசப்படுத்தி விட்டார்

இந்த நிலையில்தான் வீடு திரும்பிய அபிராமி யாரும் எதிர்பார்க்காத நிலையில் மாடியில் இருந்து கீழே விழுந்து இறந்து போனாள்.

துர் மரணம்!

'விதி வந்து விட்டது. கதை முடிந்து விட்டது' என்று நம்பூதிரியும் அதற்கு பதில் சொல்லி விட்டான்.

ஆனால் இறந்தவள் அடிக்கடி இரவில் காற்றாக வருவதும், கனன்று அழுவதும், அந்த வீட்டில் ஆசையாக ஊஞ்சல் கட்டி தோட்டத்து மரத்தில் ஆடுவதும் அடிக்கடி சகஜமாகி விட்டது.

அதை இன்றுவரை கருணாகரனால் கட்டுப்படுத்த முடியவில்லை. தன் பயம் வெறும் பிரமையோ என்று கூட நினைக்கிறார்.

எல்லாமே நினைப்புதான்.

நிஜம் எது?

அவரால் நம்பூதிரி விஷயத்தை பாம்பென்று தாண்டவும் முடியவில்லை. பழுதென்று மிதிக்கவும் முடிய வில்லை.

நினைவுகளை எல்லாம் ஒடித்துக் கொண்டு தலையை திருப்பிப் பார்த்தார். நிர்வாணத்தில் கலாதரன் பின் சீட்டில் அப்படியே மயங்கி உறங்கி விட்டிருந்தான்.

'என்னை மன்னிச்சுடுங்க சர்மா' கருணாகரன் மனது அவனை பார்த்தபடியே சர்மாவிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டது,

வெளியே பொல பொலவென்று விடிய ஆரம்பித்து விட்டது.

சூரியன் தெரிய ஆரம்பித்து விட்டான்.

நல்லவேளையாக கருணாகரன் நம்பூதிரியை. சமீபத்து விட்டார்.

# 5

அந்த லேடீஸ் என்ஜின் ஒரு மரவட்டை புழு போல் தன் பின் நீண்டு அணிவகுத்து நிற்கும் செவ்விக ரெயில் பெட்டி உலோக சதுரங்களை இழுத்துக் கொண்டு. கிளம்பத் தொடங்கியது.

அந்த முதல் வகுப்பு பெட்டியில் நம்பூதிரியும், கலாதரனும் ஏறிக் கொள்ள அரைமனதாக அவர்களை அனுப்பி விட்டு திரும்பிக் கொண்டு இருந்தார் கருணாகரன்.

"சாமி எங்க போறீங்க?"

"வய நாட்டுக்கு...என்னோட பூர்வாசிரமத்துக்கு அங்க இருக்கற ஈசான வடக்குலதான் இனி நான் பொழுதை கழிக்கப் போறேன். கலாதரன் இனி என் மேற்பார்வைல பெரிய மாந்திரீகனா வருவான்"

"கலாதரனை அவங்க வீட்ல தேடுவாங்களே."

"யார் தேடினாலும் எங்களை பிடிக்க முடியாது. நீ காட்டிக் கொடுத்தா கூட முடியாது"

"நான் அப்படி எல்லாம் செய்ய மாட்டேன்."

"இல்ல செய்வே! செய்யப் போறே. யட்சி சொல்லிட்டா, நீ அரை மனசா

எனக்கு உதவி செஞ்சதை. இந்த உதவிக்கு பரிகாரமாகத்தான் நான் உன்னை ஒண்ணும் செய்யலை.

உனக்கு ஒரு விஷயம் சொல்றேன். எனக்கு எப்ப நீ முழு எதிரியா மாறினாலும் அன்றிலிருந்து எண்ணி நாற்பதாவது நாளைக்குள்ள நீ செத்து போயிடுவே!"

"ஐய்யோ, என்ன சாமி இது மிரட்டல்...?"

"இல்ல உன் அவ நம்பிக்கைக்கு நான் கொடுக்கப் போற தண்டனை"

ரெயில் கிளம்பும் முன் நம்பூதிரியிடம் பேசியது காரை ஸ்டார்ட் செய்யும்போது நினைவில் ஓடியது. ஒரே இரவில்தான் எவ்வளவு மாற்றங்கள்!

கருணாகரனுக்குள் மனதில் பீதி மேகம் போல் அடைத்துக் கொண்டு உள்ளத்தை கருக்க விட்டது.

கார் ஊருக்குள் நுழையும் போது எங்கும் பரபரப்பு. கேட்டை தாண்டி பங்களாவினுள் செலுத்தும் போது வாட்ச்மேன் ஓடிவந்து சொன்னான்.

"எஜமான்...நம்ம ஊர் சர்மா சாமி மகனை காணோமாம்'

கருணாகரனுக்கு நெஞ்சை வலித்தது.

வீட்டு ஊஞ்சலின் எலித்தனமான சப்தத்துக்கு நடுவே ஊஞ்சல் பலகை மேல் சோகமாக உட்கார்ந்து இருக்கிறார் சர்மா.

பூஜை அறையின் வாசல் படி மேல் அழுதபடி அவர் மனைவி பாக்யம்.

தூக்கி வந்து போட்ட நாற்காலியில் சப் இன்ஸ்பெக்டர் வின்சென்ட்.

"புகார் எழுதிக் கொடுத்தா நான் தீவிரமா எங்க டிபார்ட்மெண்ட்டை முடுக்கி விட்டுருவேன்" வின்சென்ட் ஆரம்பிக்கிறார்.

"என் பரம்பரையில் யாரும் போலீஸ் ஸ்டேஷன் பக்கம் எதுக்குமே வந்ததில்லை."

"இப்ப அதைப் பேசறதுல பிரயோஜனமில்ல. உங்களுக்கு எதிரிகள் யாராவது?"

"யாராவது எங்களை எதிரியா நினைக்கலாம். ஆனா நாங்க யாரையும் அப்படி நினைக்கறதில்லை"

"ப்ளிஸ் எங்களுக்கு கோ ஆப்பரேட் பண்ணுங்க மிஸ்டர் சர்மா. உங்களைப் பற்றி எங்களுக்கும் தெரியும், உங்க மகனோட போட்டோ ஒண்ணு வேணும்."

போட்டோ வருகிறது. போட்டோவை பார்த்த வின்செண்ட் முகத்தில் ஆச்சரிய நெளிச்சல்,

'இவ்வளவு சின்னப் பையன் தானா ஒடியிருக்க சந்தர்ப்பம் இல்லை' என்கிறது உதடு.

"அவனுக்கு இப்ப போதாத காலம். நேத்து கூட அந்த நினைப்புல நான் கவலைப்பட்டேன். அப்புறம் எல்லாம் கடவுள் பார்த்துப்பார்னு விட்டுட்டேன். ஆன உடனேயே இப்படி ஆயிடுச்சு"

"ஒ கே... ஒகே... நீங்க கவலைப்பட வேண்டாம். எங்க போலீஸ் டிபார்ட்மெண்ட் எல்லாத்தையும் பார்த்துக்கும்"

வின்செண்ட் எழுந்து கொண்டார். வீடு வரை வந்து புகார் எழுதி வாங்கிச் செல்ல வின்செண்ட்டுக்கு வேறு பல காரணங்களும் இருந்தன.

கிறிஸ்தவனாக வின்செண்ட் இருந்த போதிலும் சர்மாவின் நல்லாசிகளால் வின்செண்ட் குடும்பத்தில் எவ்வளவோ மங்களகரமான நிகழ்ச்சிகள்.

குறிப்பாக கலாதரனை பற்றி நிறைய கேள்விப்பட்டு இருக்கிறார். எல்லாம் சேர்ந்து ஸ்டேஷனுக்கு செல்லும் வழியில் அப்படியே சர்மா வீட்டிற்கு இழுத்துச் சென்று விட்டது.

வின்செண்ட் வெளியேறவும் வீதியின் முக்கியத் தலைகள் வீட்டிற்குள் நுழைந்து ஆளாளுக்கு விசாரிக்க ஆரம்பித்தார்கள். ஒரு கூட்டம் வெளியே எல்லா இடங்களிலும் தேட ஆரம்பித்தது.

ஒரு நாள்

இரு நாள்

மூன்று நாள்

மூன்று வாரம்...

மூன்று மாதம்...'

துரும்பாகி விட்டாள் கலாதரனின் தாய் பாக்யம்.

பார்க்க ஒரு பரதேசி போலாகி விட்டார் சர்மா. வீட்டில் திரும்பின பக்கமெல்லாம் சோகக்களை.

ஊரில் இருந்து வந்திருந்தான் சிவராமன். பாக்யத்தின் ஒரே தம்பி. அவன்தான் சோகத்துக்கு நடுவிலும் இயங்கித் திரிபவன்.

அவ்வப்போது போலீசோடும். வெளிக் கூட்டத்தோடும் தேடும் படலத்தில் இறங்கி அலைந்து கொண்டு இருப்பவன்.

டி வி. யில் கூட கலாதரன் படம் வெளியிடப்பட்டு தமிழ் நாடே அவனை பற்றி கவலையுடன் சிந்திக்கும்படி செய்தாகி விட்டது.

ஒரு பலனும் இல்லை.

இந்த நிலையில்தான் சிவராமனுக்கு காணாமல் போனதை கண்டுபிடித்துத் தரும் ஒரு உபாசகர் பற்றி தகவல் கிடைத்தது.

மை போட்டு பார்த்து ஆள் இருக்கும் இடத்தை சொல்லக் கூடியவர் என்ற தகவல் அறிந்து அவரைப் போய் பார்த்தபோது அவர் அரை நொடியில் சொல்லி விட்டார்.

"அவன் இந்த தமிழ்நாட்டிலேயே இல்லை."

கேரளத்து பக்கம் மலை சூழ்ந்த இடத்தில் இருக்கிறான். அவனை கடத்திச் சென்று இருக்கிறார்கள். கடத்தியவர் முகம் திருஷ்டியில் புலப்பட மறுக்கிறது.

சிவராமனுக்கு தூக்கி வாரிப் போட்டது. வீடு திரும்பி சர்மாவிடம் சொன்ன போது அவர் அப்படியே கலங்கி விழுந்து விட்டார்.

பாக்கியத்தாலோ அதை நினைத்துக் கூட பார்க்க முடியவில்லை. அதன் பிறகு ஒரு வாய் சாப்பாடு கூட அவளிடம் செல்லவில்லை. ஏற்கனவே துரும்பாகி விட்ட அவள் உடல் இந்த நிலையில் மரணத்தோடு ஒரு போராட்டமே நடத்த ஆரம்பித்து விட்டது.

"சர்மா. நீங்க இந்த குறி கேக்கறது. மை போடுறது மாதிரி விஷயங்களை எல்லா நம்பறீங்களா?" வின்சென்ட் வந்து கேட்டபோது சர்மாவிடம் பெருமூச்சு கலந்த மவுனம்.

"இதெல்லாமே பொய், சரியான மூடத்தனம். யாராவது சமூக விரோதிகள் உங்க மகனை கடத்தி இருக்கலாம். பம்பாய் மாதிரி இடங்கள்ல பிச்சை எடுக்க பயன் படுத்தலாம். நான் அங்க எல்லாம் தேட ஏற்பாடு செய்து இருக்கேன்."

வின்சென்ட் தனது சமாதானத்தை வேறு ரூபத்தில் சொல்லப் போக அது பாக்கியத்தை பெரிய அளவில் பாதித்து விட்டது.

"என் பிள்ளை பிச்சை எடுக்கறானா? ஐய்யய்யோ... அவன் வேத பாராயணமெல்லா பண்ணி பிரகலாதன் மாதிரி பேரெடுப்பான்னுதானே நினைச்சேன். பிச்சை எடுக்கறதாவது...டேய் கலாதரா இதுக்கா நான் உன்னை பெத்தேன். என் செல்லமே...'

ஈரக்குலை நடுங்க அலறியவள் உயிர் அடுத்த வினாடியே போய் விட்டது.

# 6

கருணாகரனும் முன்போல் இல்லை. எதையோ பறிகொடுத்த பாவனை வேறு. தன் செயலின் குற்றம் தனக்கே பிடிக்காத உறுத்தலில் வீட்டைவிட்டு வெளியே செல்லவே அவருக்கு பிடிக்கவில்லை.

எதார்த்தமாக மாடியில் உலாத்த போனவர் பார்வையில் வீதியில் தென்பட்ட அந்த காட்சி அவரை உலுக்கியே விட்டது.

சர்மா கொள்ளிச் சட்டி தூக்கியபடி முன்னால் வர எளிமையான பச்சை ஓலை பாடையில் தீர்க்க சுமங்கலியாய் மரணம் அடைந்த பாக்யத்தின் சடலம்.

ஊரே மவுனமாய் வாய் பொத்தி பின்னால் வருகிறது.

கருணாகரனுக்கு தொண்டையில் முள் ஏறியது. பொட்டில் ஊசி குத்தின மாதிரி வலி.

"அடடா... தான் செய்த ஒரு செயலுக்கு இத்தனை மோசமான பின் விளைவா?" சரிந்து போய் மாடியை விட்டு இறங்கி வந்து அப்படியே சோபாவில் விழுந்து விட்டார்.

ஏற்கனவே லட்சணமான மனைவியை இழந்து ஒரு அர்த்தமில்லாத வாழ்க்கை வாழும் நிலையில் இப்பொழுது இந்த பாவச் சுமை வேறா...?

'போய், போலீசில் உண்மையைச் சொல்லி விடலாமா?' உஷ்ணப் பெருமூச்சுடன் மனது உடைந்து போனார்.

'சொன்னால் சொன்ன நாற்பது நாளுக்குள் சாக வேண்டி வந்து விடுமே...?'

இறப்பையும், பிறப்பையும் கடவுள் தான் தீர்மானிக்கிறார். இந்த நம்பூதிரியில்லையே...?

நம்பூதிரி இல்லையென்றால் அவனது மாந்திரீகத்தால் நிகழும் அற்புதங்களுக்கெல்லாம் காரணம் எது?

எல்லாமே தற்செயல்… ஆம் தற்செயல்தான்…

இல்லை மாந்திரீகம் ஒரு சக்தி...அது ஒரு நல்ல கலை.

பின்மண்டை சிலும்பி விட்டது கருணாகரனிடம்.

'எது பொய்? எது உண்மை?' முடிவிற்கே வர முடியாதபடி புத்தி குழம்பியது.

அது உண்மையோ, பொய்யோ தைரியமாக இனி நல்லதை மட்டுமே செய்ய வேண்டும் என்கிற உறுதி உள்ளத்தில் மெல்ல வலுப்பட ஆரம்பித்தது,

செத்தாலும் சரி சர்மாவும் அழுது சோகத்தால் சாவதற்குள் கலாதரனை மீட்டு வந்து அவரிடம் ஒப்படைத்து விடவேண்டும்...

கடத்திச் சென்று ஒப்படைத்த நாமே மீட்டு வந்து விடவேண்டியதுதான். இதுதான் சரியான பரிகாரம்.

என்ன ஆனாலும் சரி...மனதில் உறுதி வலுப்பட்ட போது பலமாக காற்று வீசியது. பக்கத்தில் சுவற்றில் மாட்டப்பட்டிருந்த அபிராமி படத்தில் அவளுக்கு போட பட்டிருந்த மாலை அவிழ்ந்து கருணாகரன்

கை மேல் வந்து விழுந்து, எடுத்து முடிவு சரி என்று சொல்கின்ற மாதிரி மணக்க ஆரம்பித்தது.

## 7

கலாதரனின் உருவமே மாறிப்போய் விட்டிருந்தது. தலையை மழுங்கச் சிரைத்து, நெற்றியில் ரத்தப்பொட்டு வைத்து வசியமையால் வட்டம் கட்டியிருந்தான்.

கழுத்தில் மந்திரித்த அஷர முடிக்கயிறு.

மணிக்கட்டில் சில தாயத்துகள். அவன் இருக்கும் சூழ்நிலையே பார்க்க படுகோரமாக இருந்தது. கூண் ஒன்றில் தேவாங்கு ஒன்று சுருண்டிருந்தது. கறுப்பான நாய் ஒன்று வேங்கைப் புலி போல் பார்க்க கம்பீரமாக தெரிந்தது.

ஹோமகுண்டம் ஒன்று அவிந்து அடங்கிக் கொண்டிருந்தது. மண் சட்டிகள் சிலவற்றில் உறைந்து போன ரத்தக் குழம்புகள்.

கோபாலன் நம்பூதிரியின் உபதேசத்தில் கலாதரன் மிக வேகமாக ஈர்க்கப்பட்டு அவன் கற்றுத் தந்த விஷயங்களை மிக சீக்கிரமாகவே ஸ்வீகரித்திருத்தான்.

இப்பொழுதுகூட ஏதோ ஒரு உபதேசம் நடந்து கொண்டிருந்தது.

"கலாதரா சாப்பிடாமலே உயிர் வாழும் வித்தையை இன்று முதல் நீ செய்து காட்ட வேண்டும். ஒரு வருஷம் வரை எதுவும் சாப்பிடாமல் ஜீவனை தெளிவாகவும், வலுவாகவும் வைத்துக் கொள்ளும் சக்தி நம் குண்டலினிக்கு உண்டு.

அதை அடி வயிற்றிலிருந்து எழுப்பி நெற்றிக்கு கொண்டு வா பார்ப்போம். '

நம்பூதிரியின் கட்டளைக்கு மறுபேச்சு பேசாமல் கலாதரன் பயிற்சியில் ஈடுபட ஆரம்பித்தான்.

பத்மாசனத்தில் அமர்ந்து நாடியை சமப்படுத்தி, நாபிக்கமலத்தில் காற்றை விடுவித்து சுவாசத்தில் பிங்கள சுவாசம் எனும் முறைக்கு வந்து உடம்பின் ரத்த ஓட்டத்தை உடம்பெங்கும் ஒரே சீராக கொண்டு வந்து

அடி வயிற்றை எக்கிக் கொள்ள ஆரம்பித்தான்.

மிக அபாயமான பயிற்சி. ஐம்பது வருட யோகப் பயிற்சி செய்பவர்களே கூட இந்தப் பயிற்சியால் மூச்சுத் திணறி காது வழியாக ரத்தம் பாய்ந்து இறந்துவிடக் கூடிய அபாயகரமான பயிற்சி.

கலாதரன் அதைச் செய்யும்போது குரூரமாக நம்பூதிரி தூர இருந்து ரசித்துப் பார்த்து சிரிக்கிறான்.

"செய்… செய்..."

என் முந்தைய சிஷ்யன் விஷ்ணுபதியை போல பிராந்தனாகி என்னை ஏமாற்றி விடாமல் மிகப் பெரிய வித்தைக்காரனாக இப்பொழுதே சுடுமையாக இதை எல்லாம் செய்…

எனக்கு மரணம் வந்தால் எனக்குபின், நீதான்... உன்னை அதற்காக மட்டும் கொண்டு வரவில்லை கலாதரா. நீ போடும் கொள்ளியால்தான் எனக்கு மறுபிறப்பு இல்லாமல் போகும்…

இனி நீ என் சுவீகார புத்திரன் கூட…

இந்த நிமிஷம் முதல் நான் மாந்திரீகத்தை கை விட்டுவிட்டு சந்திரீகனாக மாறப் போகிறேன்.

மரணம் வரும்வரை நாள் இனி உன்னத பிராமணன். மோசமான மாந்திரீகர்களின் மறுபிறப்பு மகா கோரமானது. அது காட்டுப்புலியாகவும் இருக்கலாம். ஆற்று முதலையாகவும் இருக்கலாம்.

எனக்கு அது கூடாது.

பொல்லாத பாதையில் நான் போனது போதும்.

என் வித்தையும் அழியக்கூடாது. எனக்கும் நல்ல கதி வர வேண்டும்.

கலாதரா உன்னால்தான் அதை சாதிக்கமுடியும். இந்த சக்தியை நல்லதற்கு மட்டும் இனி நீ பிரயோகிக்க வேண்டும்.

என்னை விட்டு எந்த நாளும் பிரிந்து போகக் கூடாது. உன்னை பிரிந்து போக விட மாட்டேன்.

இனி நீ என் சீடன் மட்டுமல்ல... மகனும் கூட…

வரும் நல்ல முகூர்த்தத்தில் மகாசண்டி சாட்சியாக உன்னை நான் மகனாக தத்து எடுத்துக் கொள்வேன்...

அதன் பிறகு நீ எனக்கு மட்டுமே கர்மம் செய்ய கடமைப்பட்டவன்.

நம்பூதிரிக்குள் ஆசையும், எண்ணமும் பொங்கி கண்ணில் வழிகிறது.

அப்படி வழியும்போது அந்த கறுப்பு நாய் ஏனோ கடூரமாக குலைக்க ஆரம்பித்தது.

நம்பூதிரியின் பார்வை அந்த நாயையே வெறித்தது. அது லட்சியம் செய்யாமல் குரைத்தது.

இது நல்லதிற்கில்லையே.

# 8

கோழிக்கோடு பஸ் நிலையம் கடந்த கேரளத்தின் இதம் பதமான காலச் சூழ்நிலை.

ஊருக்குள் ஊர்ந்து கொண்டிருக்கிறது. கருணாகரனின் கார். இங்கிருந்து வயநாடு சென்று, வயநாட்டிலிருந்து பிரிந்து செல்லும் தனிப்பாதையில் 'அம்மாப் புழா' என்னும் அந்த இடத்திற்கு செல்ல வேண்டும்.

நம்பூதிரியை முதன் முதலில் பார்க்க இத்தனை துாரம் நண்பருடன் வந்தது கருணாகரனின் ஞாபகத்திற்கு வருகிறது.

வழியெங்கும் பசுமையின் ராஜ்யம் பலா மரத்தில் உருண்டு திரண்டிருக்கும் பழக்குலைகள், கிளைகளையும், அடிமரத் துண்டுகளையும் வளைத்துப் பரவியிருக்கும் மிளகுக் கொடிகள்.

இதையெல்லாம் இப்பொழுது ரசிக்க மனதேயில்லை.

நம்பூதிரியை பார்த்து காலில் விழுந்தாவது கலாதரனை மீட்டாக வேண்டும். மாட்டேன் என்றால் கொல்லத் தயங்கவே கூடாது.

பஞ்ச பூதங்களால்தான் மரணமாமே?

நம்பூதிரி எல்லாம் பொய்யாகப் போகிறது நீ எனக்கு கட்டுப்பட மறுத்தால் என் துப்பாக்கி உன் உயிரை குடித்துவிடும். குடித்தே தீரும்.

கருணாகரனுக்குள் தீர்க்கம் பரவுகிறது. இறந்து பாடையில் போன பாக்கியம் முகம் அவர் மனதைக் குடைகிறது.

"நான் அவளை கொல்லாமல் கொன்று விட்டேன்" என்று மனது நினைத்து அழத் தொடங்குகிறது.

காரின் வேகம் மட்டும் குறையவில்லை.

அம்மாப்புழாவின் தனது பர்ணா சாலைக்கு வெளியே அந்த கறுப்பு நாயோடு வந்து நிற்கும் நம்பூதிரியை வானத்தின் கறுத்த மேகம் வெறித்து பார்த்தது.

அடப்பமான சூழல்.

மழை கொட்டி முழக்கலாம்…

பலாமரத்து அணில் ஒன்று நம்பூதிரியின் தோரணையை பார்த்து விதிர்த்து மரமேறி நின்று கொண்டது.

அப்பொழுது யாரோ சிலர் தொலைவில் வரும் அரவம்.

"யாரது" நம்பூதிரியின் பார்வை ஊடுருவும் சமயம் அவர்கள் சமீபித்து விட்டார்கள். பார்க்க பணக்காரத்தனம் பளிச்சிடும் தேகம். நான்கு பேர்களாக நம்பூதிரியைப் பார்த்து கைகூப்பினார்கள்.

"நம்பூதிரியை காணாமின்னு..." கோரசாக சொன்னார்கள்.

"என்ன விஷயம்?"

"நாங்க குடவல்லிப்புழாவை சேர்ந்தவங்க. எங்க ஊர்ல அடிக்கடி ரத்தமழை பெய்யுது. ரொம்ப பயமா இருக்கு யாரோ ஏவல் செய்திருக்காங்க... நம்பூதிரி வந்து பார்த்து அந்த ஏவலை விரட்டி அடிக்கணும்"

நம்பூதிரியிடம் அசாத்ய மவுனம்.

"நம்பூதிரியை விட்டா எங்களுக்கு கதி இல்லை"

அவர்கள் விடுவதாக தெரியவில்லை.

"இல்லை… இனி நான் இந்த மாதிரி விஷயங்கள்ல ஈடுபடற மாதிரி

இல்லை" இது நம்பூதிரி.

"அப்படி சொல்லக் கூடாது. ஊர் கூடி வசூல் பண்ணி எவ்வளவு கேட்டாலும் தரோம். பெண் பிள்ளைகள் வெளியே வரவே பயப்படறாங்க"

"இருக்கலாம். எனக்கு இனி என் தனி வாழ்க்கை ரொம்ப முக்கியம்"

"கொஞ்சம் தயவு பண்ணனும்" அவர்கள் பேசப் பேச நம்பூதிரிக்கு இந்த விஷயத்திற்கு கலாதரனை அனுப்பினால் என்ன என்கிற எண்ணம். கடைசியில் அனுப்புவது என்ற முடிவிற்கு வந்து.

'சரி என் சிஷயன் வருவான்" என்றபோது முகத்தில் மலர்ச்சி!

கறுப்பு துண்டை இடுப்பில் கட்டியபடி குடவல்லிப் புழா முழுக்க நடந்து கொண்டிருக்கிறான், கலாதரன். இடுப்பு துண்டு முடிப்பில் எலுமிச்சம்பழத்தை துண்டு துண்டாக நறுக்கி வைத்திருக்கிறான். ஏதேதோ சொல்லியபடி அந்தத் துண்டங்களை திக்குக்கு ஒன்றாக வீசி எறிகிறான்.

மிகவும் களையான அவனது முகத்தை அத்த புழாவை சுற்றியுள்ள ஜனங்கள் அதிசயமாக பார்க்கும் போது கருணாகரனின் கார் அந்த இடத்தை கடந்து கொண்டிருந்தது.

எதிர்பாராமல் கலாதரனை அங்கே அந்த கோலத்தில் பார்த்த கருணாகரனுக்கு திகைப்பு. காரை நிறுத்திவிட்டு வேகமாக இறங்கினார்.

அவன் பின் செல்லும் சில ஊர்க்காரர்களோடு சேர்ந்து நடந்தார். நடக்கும்போதே 'கலாதரன் கலாதரன்' என்று அழைத்துப் பார்த்தார்.

ஒரு கட்டத்தில் அவன் திரும்பிப் பார்த்தான். லேசாக முறைத்து விட்டு திரும்பவும் எலுமிச்சை துண்டங்களை வீசி எறிய ஆரம்பித்தான்.

"ஆமா என்ன நடக்குது இங்க?" கூட்டத்திடம் கேட்டார்.

"ஊர்ல ரத்த மழை. மாந்திரீகர் ஊரையே கட்டு மானம் செய்யறார். மந்திரிக்கிறார்."

"ரத்த மழையா என்னய்யா இது புதுக்கதை. அந்த ரத்தத் துளிகளை பரிசோதிச்சீங்களா?'

"அதெல்லாம் தெரியாது. இது ஏதோ பிசாசோட வேலை."

கருணாகரனுக்கு பதறியது.

"அடேய் கலாதரா உங்கம்மா செத்துட்டாங்க. என் கூட வா" கத்தி அழைத்தார்.

அவன் உடனேயே திரும்பிப் பார்த்தான்.

"என்னோட அம்மா சண்டி. அவளுக்கு சாவே கிடையாது" என்றான்.

"ஐய்யோ இப்படி கூட ஒருத்தரோட நினைவுகளை மழுங்க வைக்க முடியுமா என்ன. கலாதரா நீ இப்ப என் கூட வரே"

அவன் கேலியாக சிரித்து விட்டு நடக்க ஆரம்பித்தான்.

" தயவு செய்து என் கூட வா"

"நான் ஏன் உன் கூட வரணும். நீ யார்? என் குருநாதர் சொன்னா வரேன்"

"உன் குருநாதர் ஒரு சுயநலவாதி"

"எனக்கு அதை பற்றி கவலையில்லை"

"டேய் என்னை யாருன்னு தெரியலையா - நான்தான் உன்னை கடத்தி இவர்கிட்ட சேர்த்தேன். அந்த பாபத்துக்குதான் பரிகாரமா உன்னை நானே அழைச்சு போக வந்திருக்கேன்"

"நீங்க சொல்றது எனக்கு புரியலை"

"பேச நேரமில்லை வா என் கூட - உன் அப்பா இன்னும் நாலு நாள் கூட தாங்க மாட்டார். அவ்வளவு மோசமா இருக்கார்"

இருவரும் வாதப் பிரதிவாதம் செய்யும்போது ஒருவன் அந்த இடத்தை விட்டு ஓடினான். நேராக கோபாலன் நம்பூதிரியிடம் விஷயத்தை சொல்லிவிடும் ஆவல் அவன் ஓட்டத்தில் தெரிந்தது.

# 9

த்மநாப சர்மா அந்த கட்டிலின் மேல் ஒரு சவம் போலத்தான் கிடந்தார்.

ப முதலில் மகனை இழந்துவிட்டார்... அடுத்து மனைவி... இனி இழக்க ஒன்றுமில்லை.

அடுத்து தனது உயிர்தான்.

சிவராமன் அவர் அருகில் சோகமாக உட்கார்ந்திருந்தான்.

"எனக்கு கடவுள் பக்தியே அத்துப்போச்சு அத்திம்பேர்" என்றான் சோகமாக...

"அப்படி சொல்லாதேடா... இதெல்லாம் வினை. அனுபவிச்சுதான் தீரணும்" இது நடுங்கும் குரலில் சர்மா.

"அப்படின்னா பூஜை எதுக்கு, புனஸ்காரம் எதுக்கு? மனுஷா அது மேல வைச்சிருக்கிற நம்பிக்கைக்கு அர்த்தம்தான் என்ன?"

சோதனையில தான் ஒருத்தன் மனச் சோர்வடையாம இருக்கணும் "

"ஆமா உங்களால முடியறதா. சோர்ந்துட்டேளே, பாசம் உங்களை படாத பாடுபடுத்தறதே?"

"அது என்னை என்ன பாடுபடுத்தினாலும் என் ஆன்ம பலம் சிதறாது சிவராமா... நான் வணங்கற. தெய்வங்கள் என்னை கைவிடாது"

"எனக்கு நம்பிக்கையில்லை. நாம கடவுள் மந்திரம், தந்திரம்னு நம்பளை நாமளே நிறைய ஏமாத்திக்கறோம். புத்திதான் கடவுள். அதைக் கொண்டு சாமர்த்தியமா நடந்துக்கறதுதான் வாழ்க்கை"

சர்மா அந்த சோகத்திலும் அதை கேட்டு சிரிக்கிறார்.

"புத்திதான் கடவுள்னா அது கூட ஒரு விபத்துல கலங்கி பைத்தியம் பிடிச்சுடலாம். அப்ப உன் நிலை என்ன? நம்ம கைல எதுவும் இல்லை சிவராமா"

"இன்னுமா அந்த பேச்சு போறும் அத்திம்பேர்"

"உனக்கு அவ்வளவு அவநம்பிக்கை வந்துடுத்தா"

"நடக்கறதை பார்த்தா யாருக்குதான் நம்பிக்கை வரும். நல்லவாளுக்கு சோதனை வரலாம். அதுக்காக இப்படியா முதலுக்கே மோசம் வரும்?

கேட்டா எல்லாம். விதின்னு சொல்லி இழுத்து மூடவேண்டியது."

"நம்பிக்கை இழந்துடாதே சிவராமா. எல்லாம். நல்லபடி நடக்கும்."

"அப்ப கலாதரன் தானா திரும்பி வரணும்"

"வருவான்"

"வரலேன்னா…"

"வருவான்… வருவான்னா வருவான். எண்ணி இருபத்தி நாலுமணி நேரத்துக்குள்ள வருவான்"

"சபாஷ் வரலேன்னா நான் சொல்றபடி கேக்கறேளா"

"நிச்சயமா" தீர்க்கமாக பேசின சர்மா கண்ணை மூடி தியானத்தில் மூழ்க ஆரம்பித்தார்.

வாழ்க்கையே நம்பிக்கையில்தான் இருக்கிறது. மனோசக்தி ஒரு முகப்படும் போது மற்ற விஷயங்கள் துச்சம் என்பது போல இருந்தது அவர் தீர்க்கம்.

சிவராமன் கடிகாரத்தை பார்க்க ஆரம்பித்துவிட்டான்.

குடவல்லிப்புழாவில் கலாதரனை மறித்து நிற்கும். கருணாகரன் எதிரே தீர்க்கம் குலையாமல் வந்து, நிற்கும் நம்பூதிரியை முதல் முறையாக வெறுப்போடு பார்க்கிறார்.

"என்ன கருணாகரன் இது. என் சக்தி தெரிஞ்சுமா இப்படியெல்லாம் நடந்துக்கறே?" நம்பூதிரியின் அனல் பறக்கும் கேள்வி.

கருணாகரன் எதையும் பேசாமல் துப்பாக்கியை வெளியே எடுத்தார்.

"நம்பூதிரி என்னை கொலைகாரன் ஆக்காதே. தயவு செய்து கலாதரனை என் கூட அனுப்பி வை."

"பாவம் பத்மநாபசர்மா. அவர் குடும்பமே குலுங்கிப் போச்சு நம்பூதிரி..."

நம்பூதிரிக்கு உடல்பெல்லாம் பற்றி எரிந்தது.

"எடோய் எனக்கு மரணம் பஞ்ச பூதத்தாலதான். இந்த துப்பாக்கியால

இல்லை. முடிஞ்சா சுடு பார்ப்போம்" என்று கருணாகரனை ஊன்றிப் பார்த்தனர். ஹிப்னாடிசம் செய்யப்பட்ட மாதிரி துப்பாக்கியை தானாகவே தூக்கி எறிந்தார் கருணாகரன்.

"போ. போய் கார்ல ஏறு" எனும் கட்டளைக்கு ஏற்ப காரில் ஏறினார்.

"திரும்ப ஊர் போ...எதிரே லாரி வந்தா ஒதுங்கக் கூடாது. நேரா போய் மோதனும், மோதிச் சாகணும். போ.போ..." விரட்டினார்.

கருணாகரன் மறுவார்த்தை பேசாமல் காரை கிளப்பிக் கொண்டு ஒட்ட ஆரம்பித்தார்.

அந்த மலைப் பிராந்தியத்தில் இருபது மைலுக்கு அப்பால் லாரி ஒன்று மலை ஏறிக் கொண்டிருந்தது. அந்த லாரியை கருணாகரன் சந்திக்கும் வரை அந்த காரை லாவகமாகவே அவர் புத்தி இயக்கியது.

கார் அப்பால் அகலவும் நம்பூதிரி முகத்தில் ஏகமாய் சிரிப்பு.

"எடேய்! இது மந்திரம் இல்லை. சாதாரண மனோ வீர்யம் உன் பாஷையில இதுக்கு பேர் ஹிப்னாடிசம். இந்த சாதாரண விஷயத்துக்கே உன்னால தாங்க முடியலையே...கொச்சு மனுஷனே!"

கருத்தோடு கத்திவிட்டு கலாதரனைப் பார்த்தார். அவன் அவரைப் பார்த்து சிரித்தான்.

"என்ன கட்டுமானம் முடிஞ்சுதா?" கேட்கிறார். அவன் தலை அசைக்கிறான்.

"வா போகலாம்." அழைக்கிறார். இருவரும் நடக்கத் தொடங்க, ஒதுக்கி இருந்த சில ஊர்க்காரர்கள் உடன் வருகின்றனர்.

"நாளைக்கு வந்து பாருங்கோ..." என்கிறார் அவர்களுக்கு. அவர்கள் பயத்தோடும், பவ்யமாகவும் தலையசைத்து ஒதுங்கிக் கொள்கின்றனர்.

நம்பூதிரியின் தும்சமான நடை, கலாதரனையும் அழைத்துக் கொண்டு பாலக்காடு ஒன்றின் பாதையில் செல்கிறது.

"கலாதரா, நான் எதிர் பார்த்ததை விட நீ ரொம்ப வேகம். இன்னிக்கு உனக்கு மயான அப்பியாசம் தரப் போறேன்" என்கிறார் உற்சாகமாக. கலாதரனிடம் பதில் இல்லை. அப்பொழுது பார்த்து வானமோ இருட்டிக்

கொண்டு வந்தது. சடசடவென்று மழைத் தூறல் ஆங்காங்கே மின்னல் கொடியின் சாகச நடனம். இடி சப்தம் காதைப் பிளக்கத் தொடங்கியது.

"வா. கலாதரா... வா. சீக்கிரம் போவோம்" ஏனோ அண்ணாந்து பார்த்த நம்பூதிரியிடம் பயப்பிரவாகம்.

"ஏன் குருவே பயம்?" கலாதரன் கேட்கும்போதே மின்னல் ஒன்று தன் கரத்தில் ஒன்றை நம்பூதிரியை நோக்கி நீட்டி அவர் உடம்பை இறுக்கி ஆக்ரமித்தது.

நம்பூதிரியிடம் மரண ஒலம்.

அதன் பிறகு நெடுநேரத்திற்கு நிசப்தம்.

காரில் போய்க் கொண்டிருந்த கருணாகரனுக்கு தூக்கத்தில் விழித்த மாதிரி ஒரு விழிப்புணர்வு.

அந்த நேரம் பார்த்து அவர் மோத வேண்டிய லாரி மழையில் ஊடுருவிக் கொண்டிருந்தது. சுதாரித்து சட்டென்று காரை ஒதுக்கி லாரிக்கு வழி விட்டவர், காரை நிறுத்தி விட்டு என்ன நடந்தது என்று யோசிக்கத் தொடங்கியபோது, துப்பாக்கியை தூக்கி மிரட்டியது. வரை தான் ஞாபகத்திற்கு வந்தது.

அதன் பிறகு என்ன நடந்தது?

கேள்வியோடு வெளியே பார்த்த போது வந்த வழியே திரும்பி விட்டதை மைல் கல் ஒன்று சொல்லாமல் சொன்னது.

யோசிக்கக் கூட பிரியப்படாமல் உடனடியாக குடவல்லிப் புழா வந்தபோது ஊரே அவரை வியப்பாக பார்த்தது. 'நம்பூதிரி மரிச்சு போய்...' என்றார் ஒருவர்.

"எங்க.எப்படி?" ஆவலாக கேட்டபடி அவர்கள் வழிகாட்ட பலாக் காட்டிற்குள் ஓடியவர், கரிக்கட்டையாகக் கிடக்கும் நம்பூதிரியைப் பார்த்து அப்படியே ஸ்தம்பித்தார்.

ஒரு ஒரமாக பேந்த பேந்த விழித்தபடி துக்கம் தாங்காமல் அழுது கொண்டிருந்தான் கலாதரன்.

கருணாகரனைப் பார்த்து விட்டு நெருங்கி வந்தவன்;

"மாமா நீங்க என் ஊர்க்காரர்தானே?" என்று கேட்டான்.

"ஆமாம்.ஆமாம்...வா என் கூட." பதட்டத்தோடு அழைத்தார் கருணாகரன்.

"ஆமா. நான் எப்படி இங்க வந்தேன். என் டிரெஸ்ஸெல்லாம் மாறி இருக்கே. இவர் ஏன் இப்படி செத்துக் கிடக்கிறார்?' கலாதரன் பேசப் பேச, பதில் சொல்லக் கூட நிற்காமல் அவனைப் பிடித்து காரில் ஏற்றினார்.

"தம்பி உனக்கு எதுவுமே தெரிய வேண்டாம். நடந்ததெல்லாம் உன் வரையில ஒரு கெட்ட கனவு தம்பி, கெட்ட கனவு" என்றபடி காரை வேகமாக செலுத்த ஆரம்பித்தார்.

ஊருக்குள் கார் கலாதர னோடு நுழைந்த தகவல் பரவுகிறது. பத்மநாப சர்மாவின் கால் மாட்டில் நின்று கொண்டிருந்த சிவராமன் அதைக் கேட்டு சிலிர்த்துப் போகிறான்.

காரை விட்டு இறங்கும் வித்தியாசமான கலாதரனை அதிர்ச்சியோடு பார்த்தாலும் மனதில் பனிமழை திடீர் என பெய்த மாதிரி ஒரு சிலிர்ப்பு.

ஓடிவந்த கலாதரன், சர்மாவின் அருகே நின்றபடி "அப்பா… அப்பா..." என்று கேவியபடி கட்டிக் கொள்கிறான்.

கருணாகரனுக்கு நெடுநாட்களுக்குப் பிறகு இதயம் சீராக துடிப்பது போல் படுகிறது.

"சார்... கலாதரனை எங்க கண்டுபிடிச்சேள்?" சிவராமன் அவரை நெருங்கி கேட்கிறான் "வாங்க பேசிகிட்டே போலீஸ் ஸ்டேஷனுக்கு போவோம். ஒருவகையில நான் குற்றவாளி, எல்லாத்தையும் அங்க சொல்றேன்."

கருணாகரனின் பேச்சு சிவராமனுக்கு புதிராக இருக்கிறது.

"என்ன சார் இது புதிர் போடறீங்க?" சிவராமனுக்கு பதில் சொல்லாமல் காரில் அவனையும் இழுத்துக் கொண்டு ஏறுகிறார்.

வீதி முக்கில் ஆஞ்சநேயர் கோவிலை கார் தாண்டும் போது சிவராமன் கன்னத்தில் போட்டுக் கொண்டான்.

"கடவுள் இருக்கார் சார். இன்னிக்கு மட்டும் நீங்க கலாதரனை கூட்டி வரலைன்னா, எங்க அத்திம்பேரை பார்த்திருக்கவே முடியாது" என்றான்.

"ஆமாம் மிஸ்டர் சிவராமன். கடவுள் இருக்கார். அவர் இருக்கறதால தான் நானும் உயிரோட உங்களை பார்க்க முடிஞ்சது. மனிதர்களோட நல்ல நம்பிக்கைகள் எப்பவும் வீண் போகாது" என்றபோது ஆமோதிப்பாய் வானில் இடி சத்தம் கேட்டது. மின்னல் ஒன்று தெளிந்தது.

சிவராமனுக்கு கண் கூசியது.

கருணாகரனோ காரை நிறுத்தி விட்டு, அந்த மின்னலைப் பார்த்து கைகூப்பினார்.

முற்றும்